**வறுமைசார் கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டம் 2010**

## 1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களுக்கு இணங்கவும் இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கங்களைத் தவிர்த்து.

(அ) செயற்திட்டம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் விசேட (யென்) கணக்கிற்கான மீள் நிரப்பல்களும் அதிலிருந்தான பற்றுதல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத் திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கேடுகளுடன் திருப்திகரமாக இணக்கஞ் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீது அவை கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுதல்களுக்கு இணங்க மீளளிப்புக்களிற்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடியுமென்றும்

(உ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதிசார் நிபந்தனைகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிசார் செயலாற்றல்**

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவு ரூபா 2,573,697,860 ஆக இருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு ரூபா 5,380,039,837 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவு, முன்னைய ஆண்டிற்கான செலவு 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவு என்பவற்றின் பொழிப்பு பின்வரும் கூற்றில் தரப்படுகின்றது.

| செலவின வகுதிகள் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவு | | 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2010 | 2009 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான சொத்துக்கள் | 57,915 | 105,300 | 104,673 |
| நடைபெறும் வேலைகள் | 2,394,840,957 | 1,622,754,746 | 4,876,231,213 |
| ஆலோசனை சேவைகள் | 178,798,988 | 176,688,736 | 503,703,951 |
| | 2,573,697,860 | 1,799,548,782 | 5,380,039,837 |

**2.2 விசேட (யென்) கணக்கு**

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது விசேட (யென்) கணக்கின் செயற்பாடுகள் மற்றும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி கீழே தரப்படுகின்றன.

முற்பணக் கொடுப்பனவாகிய ரூபா 162,693,913 தொகை தொடர்பான ஒப்பந்த நடவடிக்கைகளின் 75 சதவீதம் மாத்திரம் ஒப்பந்தக்காரரினால் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. செயற்திறனின்மை விளைவித்துள்ள தாமதத்தின் காரணமாக செலுத்திய முற்பணத்துடன் வேலை 18 மாத ஒப்பந்த காலத்தின் போது செய்யப்படலாம் என்பது ஐயத்திற்குரியதாக உள்ளது.

(இ) கல்லடி பாலத்தின் புதிய வடிவமைப்பினைத் தயாரிப்பதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 06 பொறியியலாளர்களுக்கு ரூபா 575,000 கூட்டுமொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. அரசாங்க சேவையில் இருக்கின்ற வேளையில் அரசாங்க உத்தியோகத்தர்களினால் பெற்றுக்கொண்ட அறிவினைப் பயன்படுத்தி ஏனைய நிறுவனங்களுக்கு அல்லது தனிப்பட்டவர்களுக்கு வழங்கும் சேவைகளின் மூலம் பெற்றுக்கொண்ட கட்டணங்கள் மீது திரண்ட நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையானது தாபன விதிக் கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.2.2 மேற்பார்வை செய்யும் ஆலோசகர்

முறையே யென் 228,600,000 மற்றும் ரூபா 180,200,000 உடன்பட்ட கிரயத்தில் செயற்திட்டத்திற்காக வெளிநாட்டிலிருந்து ஆலோசனை சேவைகளையும் உள்ளூர் ஆலோசகர்களையும் பெற்றுக்கொள்வதற்காக 2007 ஆம் ஆண்டில் ஒரு கூட்டுமுயற்சி ஆலோசனைக் கம்பனி நியமிக்கப்பட்டிருந்தது. அவ்வற்றில் இடைநேர் மற்றும் நிகழத்தக்கவைகளைத் தவிர்த்து வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ஆலோசனைகளின் உள்ளபடியான கிரயம் மாத்திரம் முறையே யென் 216,254,710 மற்றும் ரூபா 166,542,411 ஆக இருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 யூன் மாதத்திலிருந்து தொடங்கி 6 மாத சேவைக் காலத்துடன் நியமிக்கப்பட்ட ஆவண நிபுணத்துனர் 2010 திசெம்பர் இறுதி வரையும் ஒரு மாதம் மாத்திரம் சேவையாற்றியிருந்ததனால் வேண்டப்பட்ட சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததா என்பதனை கணக்காய்வில் உறுதிப்படுத்துவது சாத்தியமற்றதாக இருந்துது. அந்த நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட யென் 16,551,470 இல் மிகுதித் தொகையான யென் 13,838,470 ஒதுக்கீட்டின் 84 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தியது. எனவே செயற்திட்டம் தொடர்பான ஆவணங்கள் முறையாகத் தயாரிக்கப்பட்டிருந்தன என்பதனையும் ஆவண நிபுணத்தினரின் தொடர்புபட்ட நடவடிக்கைகள் செயற்திட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்டவாறு முறையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பதனையும் கணக்காய்வில் திருப்திகொள்வது சாத்தியமற்றதாக இருந்தது.

## 4. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 நிதிசார் மீளாய்வு

### 4.1.1 நிதிகளின் பயன்பாடு

| | உடன்படிக்கையின் படி வழங்குவதற்கு உடன்பட்ட தொகை | | 2010 ஆம் ஆண்டிற்கான பாதீடு | 2010 ஆம் ஆண்டிற்கான நிதிகளின் பயன்பாடு | 2010 திசெம்பர் 31 வரையும் நிதிகளின் பயன்பாடு |
|---|---|---|---|---|---|
| | யென் (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | ரூபா (மில்லியன்) |
| ஜேபிஐசீ | 4,460 | 4,756 | 1,790.0 | 1,630.8 | 4,716.3 |
| ஜிஓஎஸ்எல் | - | 1,494 | 241.9 | 241.9 | 591.3 |
| | 4,460 | 6,250 | 2,031.9 | 1,872.7* | 5,307.6* |

* முற்பணற்களையும் அட்டுறுச் செலவுகளையும் தவிர்த்ததன் காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகைகளிலிருந்து இத்தொகைகள் வேறுபட்டிருந்தன.

### 4.2 செயற்பாட்டு மீளாய்வு

### 4.2.1 செயலாற்றல்

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அக்கரைப்பற்றுவிற்கும் திரிகண்டுமடுவிற்கும் இடையிலான 100 கிலோமீற்றர் வீதியினை மீள நிர்மாணித்தலும் ரூபா 6,250 மில்லியன் கிரயத்தில் கல்லடி புதிய பாலத்தினை நிர்மாணித்தலும் 30 மாதங்களுக்குள் பூர்த்திசெய்யப்படவேண்டுமென (913 நாட்கள்) வரியினை நீக்கி ரூபா 3,806,804,232 தொகைக்கு 2007 திசெம்பர் 06 ஆந் திகதி சீன வெளிநாட்டு பொறியியல் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் குறைந்த அளவான செயலாற்றலின் காரணமாக செயற்திட்டத்தின் நிறைவேற்று மற்றும் அமுலாக்கல் முகவர்களின் சம்மதத்துடன் கம்பனியினால் கல்லடிப் பாலத்தின் நிர்மாணம் கைவிடப்பட்டிருந்தது. இதன் விளைவாக கம்பனியின் ஒப்பந்த தொகையிலிருந்து ரூபா 700 மில்லியன் கழிக்கப்பட்டிருந்ததுடன் 2010 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 540 நாட்களுக்குள் பூர்த்திசெய்யப்படவேண்டுமென பாலத்தின் நிர்மாணத்துக்கான ஒப்பந்தம் ரூபா 813,469,566 கிரயத்தில் 2010 மார்ச் 25 ஆந் திகதி அரசாங்க அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.